[1986 மே 5

நாமக்கல்லில் வீட்டுவசதி வாரியப் பணிகள்.

657—(* வினா எண். 4691) திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தால் வீடு கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யும் பணி நடைபெற்று வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) நில ஆர்ஜித பணிக்கு காலதாமதம் ஏற்பட காரணம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) ஆம்.

(ஆ) நாமக்கல் பகுதியில் தற்போது மொத்தம் 260 ஏக்கர் நிலங்களை வீட்டுவசதி வாரியத் திட்டங்களுக்காக கையகப் படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. சில நில சொந்தக்காரர்கள் நில ஆர்ஜிதத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்றுள்ளனர். தடை நீங்கியவுடன், கையகப்படுத்தும் பணி துரிதமாக முடிவுறும்.

காங்கேயத்தில் குடிசை மாற்றுப் பணிகள்.

658—(* வினா எண் 5542) டாக்டர் அ. பொன்னுசாமி மற்றும் திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் காங்கேயத்தில் உள்ள அண்ணா நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) மற்றும் (ஆ): இல்லை.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதையும் கூட்டுறவு வீட்டு வசதி

1986 மே 5]

சங்கத்தின் மூலமாக ஏழை எளியவர்களுக்கு பெருந்துறையிலே வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் அவர்களே. குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பெருந்துறையில் வீடு கட்டும் திட்டம் தற்போது இல்லை. கிராமப்புற வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்த பகுதியைப் பொறுத்தவரையிலும், பிற்பட்டவர்கள், சமுதாயத்திலே நலிந்த பிரிவினரைப் பொறுத்தவரையில் பட்டா அவர்கள் கையிலே இருந்தால், வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக நிச்சயமாக அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசு உதவிகளைச் செய்யும்.

திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைமையிடங்களில் நகரை ஒட்டியுள்ள பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் சென்னை நகரில் துவங்கி இன்றைக்கு 16 மாவட்டங்களில் 43 இடங்களுக்கு என்று தான் குடிசை மாற்று வாரியப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டு உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட வட்டத் தலைநகரங்கள் பொறுத்தவரையில் தற்போது அந்த எண்ணம் இல்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக எந்தெந்தப் பகுதியில் வீடுகள் கட்டும் திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடிக் குடியிருப்புகளைப் பொறுத்தவரையில், ஈரோடு நகரில் பெரும்பள்ளம் ஓடைத் திட்டத்தில் 468 மாடிக் குடியிருப்புகளுக்கு 119 லட்சத்து, 84 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு உள்ளது. இதில் 420 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. தற்போது 48 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இது ஜூன் 86-ல் முடியும்.

[1986 மே 5

அதைப் போலவே விரிவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டப் பணிகளில் நாராயணவலசு, கல்விவலசு போன்ற இடங்களில் 2 லட்சத்து 76 ரூபாய் செலவில் 1,035 குடும்பங்கள் பயன்பெறத் தக்க வகையிலும் மேலும் பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மாடி குடியிருப்புகளைக் கட்டும் திட்டம். விரிவு படுத்தப்பட்ட மேம்பாட்டு திட்ட பணிகள், குடியிருப்புகள் கட்ட கடன் வழங்கும் திட்டம் என்ற அடிப்படையிலே பல்வேறு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்

659—(* வினா எண். 6724) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்தில் உள்ள கட்டிடங்களில் வாடகைக் கொடுக்காமல் இருப்பவர்களை நீக்கி, அரசு அலுவலங்களில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்களுக்கு அக்கட்டிடங்கள் ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: அக்குடியிருப்புகளை அலுவலக உதவியாளர்களுக்கு ஒதுக்கிடு செய்யும் செயற் குறிப்புகள் பரிசிலனையில் இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் புதிதாக குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக மாடிவீடுகள் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ? அப்படியானால் எத்தனை இடங்களில் எத்தனை குடியிருப்புகள் என்ற விவரத்தையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு இதுவரை வாடகை பாக்கி எவ்வளவு உள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் தலைவர் அவர்களே, சென்னையை பொறுத்தவரையில், பவர்குப்பம் என்ற பகுதியில் 420 வீடுகள் ரூபாய் 72.69 இலட்சம் செலவிலும், வியாசர்பாடியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நகரில் 180 வீடுகள் ரூபாய் 39.08 இலட்சம் செலவிலும், வியாசர்பாடி பகுதி 2-ல் 648 வீடுகள் ரூபாய் 137.51 இலட்சம் செலவிலும், கே. புதூரில் 180 வீடுகள் ரூ. 40.77 இலட்சம்